Regd. No. M. 4593

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 21-12-1946 மார்கழி௴ 6௳ { மலர் 11

## தத்துவ விளக்கம்

### சேலம் காலேஜில் பெரியார் பேச்சு

(சென்றவாரத் தொடர்ச்சி)

5-வது

ஆத்மா

"கடவுள், மதம், அவை கற்பிக்கப்பட்டதன் காரணம், மனித அமைப்பு என்பவைகளைப் பற்றிப் பேசினேன். நான் மேலே சொன்ன ஆத்மா என்பதுபற்றியும் ஒரு சிறிது சொல்லுகிறேன்.

தோழர்களே!

மனித அமைப்பைப் பற்றிச் சொல்லிவந்தவைகளில் ஆத்மா என்பதைப்பற்றிப் பேசவே இடமில்லாமல் இருந்ததை நீங்கள் கவனித்து வந்தீர்கள். மனித அமைப்பைப்பற்றிப் பேசியவைகளில் கண்டவெல்லாம் பெரிதும் பிரத்தியட்ச அனுபவத்திற்கும், அறிவுக்கும் பொருத்தமாக இருந்தவைகளாகவே கண்டோம்.

ஆனால் ஆத்மா என்பது பற்றிப் பேசப் புறப்பட்டால் பிரத்தியட்ச அனுபவத்திற்கும், அறிவுக்கும் அதீதப்பட்டதாக இருப்பவைகளைப் பற்றியேதான் பேசவேண்டி இருக்கும்.

ஏனெனில் அது அறிவையும் அனுபவத்தையும் தூர வைத்துவிட்டு வெறும் நம்பிக்கைமீதே ஒப்புக்கொண்டு பேசவேண்டியதாக இருக்கிறது.

எதுபோலென்றால் கடவுள் என்பதைப்போலவே அதாவது ஒருவஸ்துவாக — பொருளாக இல்லாததை ஒரு சக்தியாகக் கருதி, அதாவது "கண், மூக்கு, காது, வாய், கை, கால், உடல் ஒன்றும் இல்லாமல், உருவமும் இல்லாமல், கண்களுக்கும் தெரியாததாய், மனதுக்கும் அடங்காததாய் இருக்கும் ஒரு வஸ்துவே கடவுள்" என்பதுபோல்தான் ஆத்மாவும், ஒரு வஸ்துவாக இல்லாமல் ஒரு உருவமாக இல்லாமல், ஒரு சக்தியாகக்கூட இல்லாமல் "கண்களுக்குத் தெரியாததும், மனதுக்குப் படாததும், காரண காரியங்களைக்கொண்டு கூட ஸ்தாபிக்க முடியாததுமாய் இருக்கிற ஒரு சூட்சுமப் பொருள்" என்று வழங்கப்படுகிறது. இது இந்தப்படி ஒன்று இருக்கிறது என்பதை நம்பி ஆகவேண்டுமே அல்லாமல் விவகாரம் விசாரணை ஆகியவைகளைக் கொண்டு சிந்தித்துப் பார்த்து நம்புவது என்பது முடியாததாய் இருக்கிறது.

ஆகவே ஏதாவதுஒரு நிர்ப்பந்தத்தால்தான் ஆத்மா இருப்பது ஒப்புக்கொள்ளக் கூடியதாகும். இந்த நிர்ப்பந்தம் ஒருவகையான தன்மைகளாகிய கடவுள் மதம் என்கின்றவைகள்சம்மந்தமாகக் கட்டுப்பட்டவர்களுக்குத்தான் பொருந்துமே ஒழிய தத்துவ விளக்கக்காரர்களுக்குப் பொருந்துவதாக ஆகாது.

ஏனெனில் தத்துவ விளக்கமென்றால் பஞ்சேந்திரியங்கள் அல்லது முக்காரணங்கள் ஆகியவைகளுக்கு எட்டக்கூடிய விளக்கமாக வேண்டும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பஞ்சேந்திரியங்களுக்கும், மனம், வாக்கு, காயம் என்ற முக்காரணங்களுக்கும் எட்டாததும், அவைகளுக்கு அதீதமானதுமாகக் கடவுள் ஒருவர்தான் இருக்கலாம் என்று சொல்ல இடம் இருக்கிறதே தவிர, அதாவது கடவுளைத்தான் தத்துவ அதீதன்-உண்மையைக் கடந்தவன் என்று சொல்லப்படுகிறதே தவிர மற்றபடி, தொட்டதையெல்லாம் தத்துவத்திற்கு 'மேற்பட்டது, தத்துவத்தைக் கடந்தது" என்றால் உண்மை என்ற வார்த்தை அகராதியிலேயே இருக்கவேண்டியதில்லை என்று சொல்லிவிடவேண்டியதுதான்.

ஆத்மா என்கின்ற வார்த்தை நம் தமிழ்ச் சொல் அல்ல என்றே சொல்லலாம். அதிலிருந்து தமிழர்களுக்கு, திராவிடர்களுக்கு ஆத்மா கொள்கை இல்லை என்றே சொல்ல இடமிருக்கிறது. வடமொழி தவிர வேறுமொழிகளிலும்கூட ஆத்மா என்கின்ற வார்த்தை இல்லை என்றே தெரிகிறது. ஆங்கிலத்

தில் ஆத்மாவுக்கு "சோல்" (Soul) என்று சொல்லப்படுகிறது. ஆனால் "சோல்" என்பதற்கு வடமொழியார் கொள்ளும் கருத்தும் செயலும் கற்பிக்கப்பட்டிருக்கவில்லை.

"சோல்" என்றால் மனிதனுடையது, சிந்திக்கும் தன்மை, இருதயம் மற்றும் இப்படியாக அதை ஒருக் கரணத்தின் பெயராகக் கொண்டிருக்கிறதே தவிர ஒரு தனி வஸ்துவாகக் கொண்டிருக்கவில்லை. அன்றியும் மனித சரீர அமைப்பில் ஆத்மாவுக்கு இடமோ, வேலையோ, எங்குமே வழங்கப்படவில்லை, கற்பிக்கப்படவுமில்லை. ஆத்மாவுக்கு வேலையும் இல்லை. சரீரத்தில் உள்ள கருவி கரணாதி ஒவ்வொன்றுக்கும் வேலை இருக்கிறது; இயற்கை, இயல்பு இருக்கிறது. ஆனால் ஆத்மாவுக்கு என்ன வேலை இருக்கிறது? மனம் நினைக்கிறது, கருவிகள் செய்கின்றன. மனம் அறிகிறது, கருவி கரணங்கள் அனுபவிக்கின்றன. இவற்றுள் ஆத்மாவுக்கு என்ன வேலை?

கருவி கரணாதிகளின் வேலைக்குக் காரணம் சரீர அமைப்பே ஒழிய வேறு காரணம் எதுவுமே இருக்க நியாயமில்லை.

ஒரு இயந்திரம் வேலை செய்ய காரணம் இயந்திர அமைப்பே தவிர வேறு என்ன? ஒரு கெடியாரம் மணி காட்டுகிறது, விநாடி காட்டுகிறது, மணி அடிக்கிறது, தூங்குபவனை எழுப்ப, விஷயம் ஞாபகமூட்ட அலாரம் (தொடர் ஒலி) அடிக்கிறது. மற்றும் அதிலேயே வேறு பல குறிப்புகளும் காட்டச்செய்யப்படுகின்றன. இவற்றிற்குக் காரணம் என்ன? அந்தக் கெடியார அமைப்பு அல்லாமல் வேறு எதைச் சொல்லமுடியும்? கெடியாரத்திற்கு உள்ளாக ஒரு சூட்சும வஸ்து இருந்து வேலை செய்கிறது என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? சுமார் 50 வருடங்களுக்குமுன் பட்டிக்காட்டு மனிதன் ஒருவன் எங்கள் மண்டிக்கடையில் இருந்த பெரிய கெடியாரம் ஒன்றின் தண்டு அசைவதையும் மணி அடிப்பதையும் பார்த்தும் கேட்டும் ஆச்சரியப்பட்டு,

"இதை ஆட்டுகிற மனிதன் இந்த மணி அடிக்கிற மனிதன் எங்கிருந்துகொண்டு இந்த வேலை செய்கிறான்?" என்று கேட்டான். நான் "அவன் சுவற்றுக்கு அந்தப்பக்கம் இருந்துகொண்டு அப்படிச் செய்கிறான்" என்று சொன்னேன். அதை அவன் நம்பி "இதற்கு ஒரு ஆளா? உங்களுக்கென்ன மகாராசர் எத்தனை ஆள் வேணுமென்றாலும் வைப்பீர்கள்" என்று என்னைப் புகழ்ந்து மகிழ்ந்தான்.

அதுபோல் பட்டிக்காட்டான்பருவத்து மக்களுக்குத்தான் ஆத்மாவில் நம்பிக்கை இருக்கமுடியுமே தவிர மற்றபடி அதற்கு அறிவாதாரம் என்ன இருக்கமுடியும்? மனிதனை விட அதி அற்புதமான இயந்திரங்கள் ஆத்மா இல்லாமலே தொண்டாற்றுகின்றன. அத்தொண்டுகளுக்கெல்லாம் பொறுப்பு இயந்திர அமைப்பும், இயந்திரபராமரிப்பு வாய்ப்புமே தவிர வேறு எது காரணமாய் இருக்கமுடியும்? வேறு எதற்குப் பொறுப்பு இருக்கமுடியும்?

கிருஸ்து மதத்துக்கு ஆத்மா, ஆத்ம தரிசனம், ஆத்ம தன்மை இல்லை; இஸ்லாம் மதத்துக்கும் அவை இல்லை. பௌத்த தத்துவத்திற்கும் அவை இல்லை; திராவிடர்களுக்கும் அப்படி ஒரு சொல்லேகிடையாது. இன்றைய நமக்குமாத்திரம் ஆத்மா எப்படி வந்தது? ஆத்மா கற்பனைக்கு ஏதாவது நியாயப் பொருத்தம் இருக்கிறதா? ஆத்மாவுக்குப் பொருள் இலட்சணம் இருக்கிறதா? ஆத்மா என்கின்ற சொல் ஒரு குறிப்பிட்ட மதத் தத்துவத்திற்குத்தான் வேண்டி இருக்கிறது. அதாவது ஆத்மா இல்லாவிட்டால் இந்து மதமே இல்லை.

ஆத்மா என்பது ஒரு பொய் மதகற்பனைக்குப் பொய்ப்பாதுகாப்புக் கற்பனை என்பதல்லா

(தொடர்ச்சி 7-பக்கம்)

இலவச சிகிச்சை இலவச சிகிச்சை

அடியிற்கண்ட வியாதிகளுக்கு நேரில் பூரா
இலவச சிகிச்சை

வி. பி. மூலம் விரும்புவோருக்கு:-

இளம்பிள்ளை வாதம் பாரிசவாயு, குஷ்டம், யானைக்காலுக்கு (தாம்பரக்குளிகை) எல்-லெப்ரோ ரு. 5-0-0

வெட்டை, ஆஸ்த்மா, இருமல் மற்றும் உஷ்ண ரோகங்களுக்கு கிளாப்போ ரு. 3-0-0

போக சக்திக்கு (இரு பாலருக்கும்) மாதவிடாய் கோளாறு, ரத்தக்குறைவு முதலியவைகளுக்கு பிளாட்டோ ரு. 3-0-0

சகல பல் வியாதிகளையும் போக்கி, பல் ஆட்டத்தையும் உறுதிப்படுத்தும் ஸ்ரீ கிருஷ்ணா டென்டல் பாம்
முதல் தரம் அணா 8. இரண்டாந்தரம் அணா 4.
(30-வருஷ அனுபவம்)

Dr. M. R. ராஜகோபாலன் L. I. M. B. C.,
தேவி தர்மவைத்தியசாலை, மன்னப்பிள்ளைதெரு, மன்னார்குடி (PO)

# நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

(தோழர் M. சிங்காரவேலு B.A., B.L.)

(14-12-46 குடி அரசின் தொடர்ச்சி)

அவைகளைப் பலமனிதர்கள் எடுத்துப் பாகுபடுத்தி, வேலை செய்து, வீடுகளாகவும், தொழிற்சாலைகளாகவும், இயந்திரங்களாகவும், இரயில்களாகவும், கப்பல்களாகவும், மற்றும் பல கைத்தொழில் கருவிகளாகவும் செய்தபிறகன்றோ, அவை முதலாகின்றன. தற்செயலாக ஒருவன் ஆதிக்கத்தில் அம்முதல் வந்துவிட்டால் அவைகளைத் தனதென்று பாராட்டுகிறான். இந்தப் பாராட்டலை எதிர்க்காமல் பாமரமக்கள் அவனிட்ட கூலியைப் பெற்றுக்கொண்டு முதல் முதலைக்கொண்டு பல முதல்களைச் செய்து கொடுத்து வருகின்றார்கள். உண்மையில், எல்லாவித முதலும் இயற்கைப்பொருள்களே. அம்முதலைக்கொண்டு பலபேர் உழைப்பால் வீடுவாசல்களும், கப்பல், இரயில், பொன், வெள்ளி, தொழிற்சாலை முதலியவைகளும் தோற்றுவிக்கப்படுகின்றன. எனவே உலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் அவைகளைப் பண்படுத்தினவர்களுக்கே உரியன. இதுதான் சமதர்ம நியாயம். ஆதலின் இந்தச் சொத்துகளைப் பொதுவுடைமையாக மாற்றுவதில் எவ்விதக் குற்றமும் இல்லை இது தர்மமேயாகும். கைத்தொழிலுக்குரிய பண்டங்கள் பொதுவுடைமையாகப் பாவிக்கப்படுமேயானால், அதனால் உண்டாகும் பயன் அனைத்தும் அதில் உழைப்பவர்களுக்கேசேரும். இந்தச் சொத்துகளுக்குச் சொந்தக்காரன் என்போனும் மற்ற உழைப்பவர்களைப்போல் தானும் ஒருவனாக இருந்து உழைத்து, எந்த விசாரமும் இன்றி உண்ணலாம். இதுதான் உத்தம புருஷனுக்கு அழகாகும்.

உலகத்திலுள்ள தனிவுடைமைத் தொழிற்சாலைகளைப் பொதுவுடைமைத் தொழிற்சாலைகளாக மாற்ற அரசியல் ஆதிக்கம்பெற வேண்டுமாகையால், சமதர்மிகள் அந்த ஆதிக்கத்தைப்பெற முயலவேண்டும்.

விளைவுக்கு வேண்டிய நிலங்களும், கைத்தொழிலுக்குரிய தொழிற்சாலைகளும், போக்குவரத்துக்குரிய இரயில், கப்பல், மோட்டார் வண்டிகள் முதலியவைகளும், தந்தி, தபால் ஸ்தானங்களைப்போல் பொதுவுடைமை (common ownership) யாக ஆக்கப்பட்டு, இந்தஸ்தாபனங்களில் உழைத்துவரும் தொழிலாளர்களின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டு, இவைகளின் வருமானங்கள் யாவும் பொதுமக்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டாலொழிய, உலகப்பசி, பிணி, அறியாமை முதலியன நாட்டைவிட்டாகிலும், உலகைவிட்டாகிலும் நீங்கப்போவதில்லை.

சமதர்ம ஆட்சியில், நாட்டிலுள்ள செல்வமனைத்தையும் ஐந்து முக்கிய விஷயங்களுக்கு விநியோகிக்கப்படும்.

(1) வேலை செய்ய சக்தியுள்ள மக்கள் எல்லோருக்கும் வேலை உண்டாக்கி, அவர்கள் உணவுக்கு வேண்டிய பொருள்களை அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

(2) உழைக்கமுடியாதவயது சென்றவர்களுக்கும், குழந்தைகளுக்கும் உணவு முதலியவைகளைக் கொடுத்து ஆதரிக்கப்படும்.

(3) கர்ப்பமான பெண்கள் யாவருக்கும் இரட்சணிய உதவி புரியப்படும்.

(4) மெய்ஞ்ஞானக்கல்வி யாவரும் பெறும்படி மெய்ஞ்ஞான ஸ்தாபனங்களும், கல்விச்சாலைகளும், கல்லூரிகளும் ஸ்தாபிக்கப்படும். யாவரும் உண்மை பேச வேண்டுமானால் உயர்தர பயிற்சி (culture) பெறச் செய்யவேண்டும்.

(5) யாவரும் உயர்தர வாழ்வை அநுபவிக்கும்படியாக நாடு முழுமையும் நகரமென்றும், கிராமமென்றும் வித்தியாசமின்றி, எவ்விடத்தும் வாத்தியம், சங்கீதம், ஆகாயத்தொனி, மின்சார விளக்குகள், சுகாதார ஸ்தாபனங்கள், ஆஸ்பத்திரிகள், குழந்தை வளர்க்குமிடங்கள், மியூசியங்கள், நந்தவனங்கள், படக்காட்சிகள், தோட்டங்கள் கண்காட்சிசாலைகள் முதலியவைகள் ஸ்தாபிக்கப்படும்.

இவ்வித வாழ்வின் அத்தியாவசியங்களுக்கு வேண்டிய செல்வம், பொதுநிலம், பொது நீர் ஆகியவற்றின் மூலமாகவும், தொழிற்சாலை மூலமாக

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

குடி அரசு

1946-ளு டிசம்பர் 21உ

# வரும் ஆண்டின் வேலைத்திட்டம்

1946ம் ஆண்டு மறையப் போகிறது. 47-ம் ஆண்டு பிறக்கப்போகிறது. திராவிடர் கழகம் சேலம், திருச்சி மாநாடுகளுக்குப் பிறகு ஜீவனுள்ள தன்மைக்கு வந்திருக்கிறது என்பதையும், குறிப்பிடத்தகுந்த அளவுக்குப் பிரசாரம், நிர்வாகம், அமைப்பு, முதலியவை நடந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் இயக்க அன்பர்கள் அறிவார்கள். இவற்றின் பயனாய்த் தமிழ்நாடு எங்கும் திராவிட மக்கள் இடையில் ஒரு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதையும், சிறப்பாகத் திராவிட இளைஞர்களது உள்ளத்தை இயக்கம் கவர்ந்து இயக்கம் என்றால் இளைஞர்—இளைஞர் என்றால் திராவிடர் கழகம் என்கின்ற தன்மை அடைந்திருக்கிறது என்பதையும் எதிரிகளும் ஒப்புக்கொள்வார்கள்.

இந்தத் தன்மையில் உள்ள திராவிட கழகம் 1946ம் ஆண்டின் தொடக்கத்தில் அதன் 1946ம் வருடத்திட்டமாக அடியில் கண்ட திட்டங்களை வகுத்தது யாவருக்கும் நினைவிருக்கும். அவையாவன:

1. இயக்க ஆதரவில் ஒரு தினசரி (விடுதலை) நடத்துதல்.
2. அங்கத்தினர் பெருக்குதல்.
3. கருப்புச்சட்டைப் படை அமைத்தல்.
4. நிதி சேர்த்தல்.

மேற்கண்ட இந்நான்கு காரியங்களும் 1946ம் ஆண்டில் [illegible]வில் நடைபெற்றிருக்கின்றன, நடந்து வருகின்றன என்றே சொல்லலாம்.

அங்கத்தினர்கள், முக்கியத் தொண்டர்கள் என்பவர்கள் சிலரிடம் தான்தோன்றித் தனமாகத் தங்கள் தங்கள் இஷ்டப்படிக் காரியங்கள் செய்வதும், கருத்துகள் வெளியிடுவதுமான கட்டுப்பாடு, ஒழுங்கு, பக்தி அற்ற தன்மை ஆகிய காரியங்கள் இல்லாமல் முறையாகக் காரியங்கள் நடந்திருக்குமானால் இந்தத்திட்டங்கள் இன்னும் சிறிது மேலான தன்மையை அடைந்திருக்கும் என்றே சொல்லலாம். அங்கத்தினர் சேர்க்கப்படுவதும், கருப்புச்சட்டைப்படை அமைப்பதும் ஒரு அளவுக்குத் தேக்கமடைந்து இருக்கின்றன என்பதை யாரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். நிதிவிஷயமும் எதிர்பார்த்தபடிப் பலன் அளிக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இதற்குக் காரணம் இயக்கத்திற்கு ஏற்பட்ட செல்வாக்கு தப்பான வழியிலும், பலருடைய சுயநலத்துக்கும், இன்னமும் சொல்லப்போனால் விஷமத் தன்மைக்கும் பயன்படுத்தப்பட்டதில் துஷ்பிரயோஜனப்படுத்தப்பட்டு விட்டது என்றே சொல்ல வேண்டும்.

பிரசாரம் செய்தவர்களில் பலர் இயக்கத் திட்டங்களிடம் சிறிதும் பக்தி விஸ்வாசம் காட்டாமல் சிற்சில காரியங்களில் மாறுபாடாய் நடந்துகொண்டார்கள் என்றுகூட சொல்லலாம்.

நம் இயக்கத்திற்கு இது இயற்கையாக நடந்துவரும் காரியம்தான் என்று சொல்வதானாலும், திராவிட மக்கள் தன்மை இப்படியே ஆகியிருக்கிறது என்று சொல்வதானாலும் இயக்கம் ஒரு அளவுக்குத் [illegible] பிறகும் இந்த நிலைக்கு இடமேற்பட்டது மிகவும் துக்கிக்கத் தக்க சம்பவமேயாகும்.

1946ல் நம் இயக்கம் இந்த நிலை அடைந்ததுபற்றி ஒன்றும் முழுகிப்போய் விடவில்லை என்றே சொல்லலாம். ஆனால் 1947ம் ஆண்டு மகத்தான சோதனைக்கு ஆளாகவேண்டிய காலமாக இருக்கலாம்.

ஆகலால் அதற்குத் தகுந்தபடியான திட்டமும், அதற்கு ஏற்ற அமைப்பும் செய்யவேண்டியது 1947ம் ஆண்டின் துவக்கத்தில் செய்யவேண்டிய மிகவும் அவசரமான காரியமாக இருக்கிறது.

அதற்கு முன்பாக நிதி வசூல் காரியம் முடிவு பெறவேண்டும். இந்தக்காரியம் நிறைவேற்றப்படுவதை அனுசரித்துதான் அடுத்த ஆண்டுத் திட்டம் வகுக்கவேண்டியதும் அதற்கு ஏற்ற அமைப்பு ஏற்படுத்த வேண்டியதும் அவசியமானதாகும். ஆகவே ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள், அபிமானிகள் சற்றுக் கவலை எடுத்து வசூல் காரியங்களை முடிப்பதோடு, கருப்புச் சட்டைப் படையினர் எண்ணிக்கையையும், விவரத்தையும் தெரிவித்துவிடவேண்டுமாயும் வேண்டப்படுகிறார்கள் என்பதோடு 1947ம் ஆண்டிற்கு வகுக்கப் போகும் தீவிரப் பிரசாரம், தீவிரக் கிளர்ச்சித் திட்டங்களுக்குப் பெரியதொரு துணிவுடன் சகலவித கஷ்ட நஷ்டங்களுக்கும், தன்னல மறுப்புக்கும் ஆயத்தமாய் இருந்துகொண்டு முன்வரவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## தோழர் M. R. சித்தையன் மறைவு

சேலம் தோழர் எம். ஆர். சித்தையன் அவர்கள் இயற்கையெய்தினார் என்ற செய்திகேட்டு யாம் பெரிதும்

வருந்துகின்றோம். தோழர் எம். ஆர். சித்தையனின் மறைவு திராவிட மக்களுக்கு, சிறப்பாகச் சேலம் திராவிட மக்களுக்குப் பெரியதோர் இழப்பு என்றே கூறலாம்.

பெரியார் ராமசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்த காலத்தில் சுயமரியாதைத் தேர்தலில் வெற்றிபெற்றவர்களுள் தோழர் சித்தையன் ஒருவராவர். அந்தக் காலந்தொட்டு அவர் மறையும் வரையில் சுயமரியாதைக்காரராகவே இருந்து வந்தார். பெரியார் அவர்கள் காட்டிய வழியை அப்படியே பின்பற்றி வந்த தலைசிறந்தவர்களுள் சித்தையனும் ஒருவராவர்.

திராவிடர் கழகத்தில் உண்மையான பற்றும், ஊக்கமும்கொண்டு அவர் உழைத்துவந்தார். அவர் சேலம் திராவிடர் கழகத்திற்கு ஓர் ஒப்பற்ற துணையாய் விளங்கிவந்தார். சேலத்தில் திராவிடர் கழகம் ஓங்கி வளர்ந்தமைக்குக் காரணவான்களாய் விளங்கினவர்களுள் தோழர் சித்தையனும் ஒருவராவர்.

தோழர் சித்தையன் தன்னலங் கருதி யுழைப்பவரல்லர். கட்சியின் முன்னேற்றத்தையேதன் முன்னேற்றமாகக் கருதினார். தன்னை விளம்பரப்படுத்திக்கொள்வதில் தோழர் சித்தையன் சிறிதும் விரும்பாதவர்.

தோழர் சித்தையன் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். உழைப்பால் உயர்வெய்தியவர். இயக்க அன்பர்களிடத்தும் தோழர்களிடத்தும் மற்றும் யாவரிடத்தும் பெரிதும் அன்பாக நடந்துவந்தார்.

இப்படிப்பட்ட நற்குணங்கள்நிறையப்பெற்ற தோழர் எதிர்பாராதவகையில் 15-12-46ல் நண்பகலில் மார்படைப்பால் இயற்கை எய்தினார்.

இவரின் மறைவு திராவிடர்களைப் பெரிதும் துன்பத்துள் ஆழ்த்திவிட்டது. சித்தையன் மறைந்தார் என்ற செய்தி கேட்டதும் பெரியார் இராமசாமி அவர்கள் "நம் இயக்கத்தில் உண்மையான பற்றுடன் உழைப்பவர்கள் ஒவ்வொருவரும் எதிர்பாராதவகையில் மறைந்துவிடுகின்றனரே! இது எதில் போய் முடிவடையுமோ" என்று கூறி, பெரிதும் வருத்தப்பட்டார்.

அண்மையில் தோழர் அர்ச்சுனன் எதிர்பாராவகையில் மறைந்தார். அவரின் மறைவிற்காக வருந்திக்கொண்டிருக்கும் நேரத்தில் தோழர் சித்தையன் உயிர்நீத்தார் என்றசெய்தி நமது வருத்தத்தை இரட்டிக்கச் செய்கின்றது. என்றாலும் தோழர் சித்தையனின் மறைவினால்வருந்தும் நமக்கு, "தோழர் சித்தையனைப் போலவும், தோழர் அர்ச்சுனனைப் போலவும் பலரைத் தோற்றுவிக்கவேண்டும், அவர்களைப் போல நாமும் தொண்டாற்றவேண்டும்" என்று நாம் உறுதிசெய்து கொள்வதே பெரிய ஆறுதலாக முடியும்.

தோழர் சித்தையனின் எதிர்பாராத மறைவினால் துன்பக்கடலுள் ஆழ்ந்து அல்லலுற்றுக்கொண்டிருக்கும் அன்னாரின் வாழ்க்கைத் துணைவியாருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், தோழர்களுக்கும் எமது வருத்தத்தையும், அநுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## தாழ்த்தப்பட்டோரும் தப்பட்டை வாசித்தலும்

சென்ற சில மாதங்களுக்கு முன்பு பெரியார் ஈ. வெ. ராமசாமியவர்கள் வாணியம்பாடியில் சொற்பொழிவு நிகழ்த்தும்போது அக்கூட்டத்திலேயே "பறையர்கள்" எனப்படுவோர் தமது இழிவுக்குக் காரணமான தப்பட்டைகளைக் கொளுத்திவிட்டனர் என்ற செய்தி யாவரும் அறிந்ததே. இந்நிகழ்ச்சியைப் பின்பற்றி அப்பகுதியில் பல இடங்களில் பலர் தமது பறைகளைக் கொளுத்தி வருகின்றனராம்;

தாழ்த்தப்பட்ட வகுப்பினருள் ஒருவரான "பறையர்" எனப்படுவோர் தமது தொழிலின் காரணமாகவே "பறையர்" என்று அழைக்கப்படுவதும் அதனாலேயே இழிவாக எண்ணப்படுவதும், நடத்தப்படுவதும் யாவரும் உணர்ந்த செய்தியேயாகும். எனவே வாணியம்பாடித் தோழர்களைத் தொடர்ந்து எல்லா வூர்களிலுமுள்ள "பறையர்" என்றழைக்கப்படும் தோழர்களும் தங்களது பாரம்பரை இழிவுக்கே காரணமானதும், வேண்டிய வருவாயைக் கொடுக்க வழியற்றதுமான இத்தொழிலைக் கைவிடுவதற்கறிகுறியாகத் தமது தப்பட்டைகளைக் கொளுத்தித் தமதுவெறுப்பை வெளிப்படையாய்த் தெரிவித்துக்கொள்வார்களாக.

இதற்கான ஒத்துழைப்பையும், ஆதரவையும்தருமாறு ஆங்காங்குள்ள திராவிடர் கழகத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

## பொதுக்கூட்டம்

26-12-46 மாலை 5½ மணிக்குத் தர்மபுரி எலக்ட்ரிக் ஆபீசுக்கு எதிரிலுள்ள மைதானத்தில் தோழர் பி. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் "பெரியார் ஈ. வே. ரா." அவர்கள் பேசுவார்கள்.

## கரூர் வழக்கு

கரூர் கலவர வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டுத் தற்சமயம் ஜாமீனில் வெளிவந்துள்ள தோழர்கள் கே. எஸ். ராமசாமி, எஸ். நல்லசாமி, கே. எ. சண்முகம், எஸ். சிதம்பரம், என். ரத்தினம் ஆகியோருடன் மற்றவர்களின் வழக்கும் 23-12-46 அன்று திருச்சியில் முதல் வகுப்பு ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வரும்.

## அறிவிப்பு

"பார்ப்பன படுமோச விளக்கம்" என்ற புத்தகம் ஸ்டாக் இல்லாததால் தயவுசெய்து யாரும் ஆர்டர் கொடுக்க வேண்டாமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மானேஜர்.

## அறிக்கை

வாடிப்பட்டி தோழர் எ. அசோகன் அவர்களுக்கு,

உமது விலாசம் தெரியவில்லை. ஆபீசிலிருந்து ஆர்டர்வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வாடிப்பட்டிக்கு வர வேண்டுகிறோம்.

வாடிப்பட்டி எஸ் சுப்பையா.

## (சப் ஏஜண்டு ரத்து)

கொழும்பு டவுனில் திராவிடநாடு, குடி அரசு, திராவிடமணி உதய சூரியன், இந்தியத்தாய், குமரி முதலிய பத்திரிக்கைகள் வினியோகம் பண்ணி வந்த எங்கள் சப்ஏஜண்டு தோழர் எஸ். சந்தனம அவர்களை நிபந்தனைபின்படி 4-12-46ல் ரத்துசெய்யப்பட்டதென்பதை நேயர்களுக்குத்தெரிவிப்பதோடு கடிதப்போக்குவரத்து யாவும் குடி அரசு ஸ்டோர்க்கு எழுத வேண்டுகிறோம். (மானேஜர் குடி அரசு ஸ்டோர் 130 முகாந்திரம்ரோடு. கொள்ளுபட்டி, கொழும்பு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வும், போக்குவரத்து மூலமாகவும், வர்த்தக மூலமாகவும் விளையும். பொருளாதார நிபுணர் எடுத்திருக்கும் கணக்கின்படி உலகில் விளையும் பொருள்களை விஞ்ஞான முறைப்படி விளைவித்து, செய்யப்படும் பொருள்களையும் விஞ்ஞான முறைப்படிச் செய்வித்தால், இக்காலத்தில் உள்ள 200கோடி உலகமக்கள் 2000கோடி மக்களாகப் பெருகினபோதிலும், சாதாரண வாழ்விற்கு வேண்டிய உணவுப்பொருள்களையும், உயர்தர வாழ்விற்குரிய கல்வி கேள்வி, சாகவாசம், சங்கீதம், பாடல் முதலியவைகளையும் அவர்கள் போதுமானவரையில் அடையக்கூடுமாம். வேண்டுமென்ற கவலையே யாருக்கும் இல்லாமல் போகும். எனது பிள்ளை, குழந்தைகள் "என்ன கதியாகும்" என்ற விசாரம் உலகைவிட்டு ஒழிந்தேவிடும். பஞ்சம், கொள்ளைநோய், அகால வியாதி, அகாலமரணம் முதலியவை நாட்டினின்று நீக்கப்படும்.

## முடிவு

இக்காலத்தில் பொதுச்சொத்தாக இருக்கவேண்டிய செல்வத்தை அவனவன் சொந்தமாக்கிக்கொண்டு, அவனவன் இஷ்டப்படிக் கையாண்டு வருவதால், உலக மக்களுக்கு, உலக செல்வத்தைச் சம்பூர்ணமாக அநுபவிக்க முடியாமல் போகின்றது. அவனவன் இஷ்டப்படி அவனவன் வருமானத்தைச் செலவிடுகின்றான். அதனை நிகழும் தனி உடைமைத் திட்டத்தில் அடக்குவாரில்லை. இந்தத் தனிவுடைமைத் திட்டத்தில் அவனவன் சொத்தென்றும், அவனவன் செல்வமென்றும் வாதப்பிரதிவாதம் செய்கின்றபடியால், கோர்ட்டுகள் வேண்டியிருக்கின்றன; ஜட்ஜுகளும், லாயர்களும் தேவைப்படுகின்றனர். இவ்வித வழக்குகளால் பலபேர் உழைப்பால் வந்த செல்வமனைத்தும் சோம்பேறிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இதற்குத் திருஷ்டாந்திரம் வேண்டுமானால், ஒருகாலத்தில் தனிச்சொத்தாக இருந்தபல சிறிய சொத்துகளை முனிசிபாலிட்டியும், ஜில்லா தாலுக்கா போர்டுகளும் பொதுச்சொத்தாகமாற்றி, கையாண்டு வருவதைப் பார்க்கலாம். முனிசிபல் கட்டிடங்கள், ரோடுகள், ஸாராவதிகள், முனிசிபல் விளக்குகள், சாக்கடை, கால்வாய்கள், குழாய்த் தண்ணீர் வசதிகள், முனிசிபல் பள்ளிக்கூடங்கள், நந்தவனங்கள், மியூசியங்கள், ஆகாயத்தோணிகள், ஓட்டல்கள், பாலங்கள், மின்சார விளக்குகள், இரயில் வேக்கள், டிராம்கள், பஸ்கள், கக்கூஸ்கள், முதலிய சிறிய சொத்துகள் யாவும் பொதுவுடைமையாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தனிவுடைமைக்காரர்களாகிய முனிசிபல், ஜில்லா, தாலுக்கா போர்டு உத்யோகஸ்தர்கள், சேர்மன், வைஸ்சேர்மன், கமிஷனர், பிரசிடெண்டு, வைஸ்பிரசிடெண்டு, ஹெல்த் ஆபீசர், இன்னும் மற்ற சிப்பந்திகள் முதலியவர்களின் மனப்பான்மையால் பொதுமக்கள் இத்தியாதி சொத்துகளின் முழுப்பயனை அநுபவிக்க முடியாமற் போகின்றது. இருந்தாலும், இத்தியாதி சொத்துகளின்பேரில் வழக்கில்லை, வில்லங்கமில்லை, சண்டை சச்சரவில்லை, வாதப் பிரதிவாதமில்லை, உனது எனதென்ற வித்தியாசமில்லை, வியாஜ்யமில்லை; யாவருக்கும் பொதுவாகவும் கருதப்படுகின்றன, யாவருக்கும் பொதுவாகப் பரிபாலித்து வரப்படுகின்றன, யாவருக்கும் பொதுவாக உபயோகப்படுகின்றன. இந்த விஷயங்களில் யாதாகிலும் குறைவு இருந்தால் தனிவுடைமைக்காரர் பரிபாலத்தின் தோஷமே ஒழிய, பொதுவுடைமையால் யாதொரு தோஷமுமில்லை.

பொதுவுடைமை மனப்பான்மையோடு இந்தச் சொத்துகளைப் பரிபாலிப்போர் (Administrators)கள் நிர்வாகம் செய்துவருவார்களானால் நகர வாசிகளும், கிராம வாசிகளும், இதைவிட பதின்மடங்கு சுகப்பட்டு வாழ்வதற்குத் தடையிராது.

பொதுவுடைமை, உலகிற்குப் புது விஷயமல்ல. சிற்சில பெரிய சொத்துகளும் அரசாங்க வர்க்கத்தினரால் பொதுவுடைமையாக இன்றைக்கும் கையாளப்பட்டு வருகின்றன. கல்லூரிக் கட்டிடங்கள் [University buildings), சர்க்கார் கட்டிடங்கள், பெரிய கால்வாய்கள், (big canals) ஏரிகள், மடுவுகள். தந்தி தபால்கள், காடுகள், (Forests), சேனைகள், சிப்பந்திகள், ஆயுதங்கள் ஆகியவைகள் யாவும் பொதுச் சொத்துகளாகவே பாவிக்கப்பட்டும், உபயோகிக்கப்பட்டும் வருகின்றன. இந்தச் சொத்துகளின் வருமானங்களும், உபயோகங்களும் யாவருக்கும் ஏறக்குறைய பொதுவாகவே உபயோகத்திற்கு உதவும்படி இருக்கின்றன. சிற்சில உத்யோகஸ்தர்களுக்குச் சர்க்கார், முனிசிபாலிட்டி, தாலுக்கா ஜில்லா போர்டு முதலியவைகளால் கட்டிக்கொடுத்திருக்கும் வீடுகள் பொதுவுடைமையாகப் பாவிக்கப்பட்டு, வாடகையொன்றுமில்லாமலே உத்தியோகம் புரியும் மக்களுக்கு உபயோகப்பட்டு வருகின்றன. இதே பிரகாரம் தனியுடைமையாகப் பாவிக்கப்பட்டு வரும் சொத்தக்காரருடைய

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

ரோஜா முத்தையா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மல் வேறு ஒன்றுமே அல்ல என்பேன். ஒரு பொய்யை நிலைநிறுத்த, பலபொய்பேசவேண்டி இருக்கிறது என்பதுபோல் இந்துமத தத்துவம் என்கின்ற பொய்த் தத்துவங்களை நிலை நிறுத்தவேதான் ஆத்மா, மோட்சம், நரகம், மறுபிறவி, விதி, கர்மம் என்பன போன்ற பொய்க் களஞ்சியக் கற்பிதம் ஏற்படுத்தவேண்டியதாயிற்று.

மனிதன் பிறக்கிறான், வளர்க்கப்படுகிறான், சரீர தாது அமைப்பின்படி இயங்குகிறான், சாகிறான். செத்தபின் சரீரம் அழிக்கப்படுகிறது. இவ்வளவுதான் மனிதனைப்பற்றி நாம் கண்ணில் பார்க்கிறோம். மற்றவைகள் உத்தேசம், கற்பனை, கண்மூடி நம்பிக்கை என்பதல்லாமல் எதற்கு தத்துவ விளக்க ஆதாரம் காண்கிறோம்?

ஆத்மாவுக்கு ஆத்ம கற்பிதக்காரர் கற்பித்திருக்கும் வேலை என்ன? என்று பார்த்தால் ஆத்மா கடவுளைப்போல் உருவமற்றது அல்ல. மற்றென்னவெனில் அது (ஆத்மா) அணுவுக்கும் சிறிதான, நுட்பமான, கண்ணுக்குத் தெரியாததான, அழியாத நித்தியமான ஒரு வஸ்து. அதற்குச் சரீரம் எப்படிப்பட்டதென்றால் அதுவும் சூட்சுமதேகம் அதாவது கண்ணுக்குத்தெரியாத வெகு நுட்பமான தேகம், இதற்கு வேலை என்னவென்றால் ஒரு பெரிய சரீரமும் அதன் அந்தக் கரணங்களும் கரணக் கருவிகளும் எண்ணிய, செய்த, காரியங்களுக்காகப்பயனை அனுபவிப்பதாகும் என்பதாகும். இதற்கு என்ன அருத்தம் அல்லது உபமானம் சொல்லலாம் என்றால், இல்லாத மனிதன் போகாத ஊரில், செய்யாத காரியத்திற்காக அனுபவிக்க முடியாத தண்டனை என்பதைச்சொல்லலாம். ஒரு கெடியாரம் தவறாக மணி காட்டியதால் கெட்டுப்போன காரியம் ஒன்று இருக்குமானால் அதற்குப் பொறுப்பாளி ஒன்று அந்தக் கெடியாரத்தைச் செய்தவனாவான், அல்லது அந்தக் கெடியாரத்தைப் பராமரித்தவனாவான், இரண்டுபேர் இடமும் குற்றம் இல்லையானால் மணியைத் தவறாகக் கணித்துக்கொண்டு நடந்தவனாவான். இவர்கள் மூவரும் அல்லாமல் கெடியாரத்தின் ஆத்மா மீது குற்றம் சுமத்தி, அதற்கு அதைக் கண்ணுக்குத் தெரியாததாக்கி, அதற்கு ஒரு கண்ணுக்குத் தெரியாத ஒருசரீரம் கொடுத்து அதைத் தண்டிப்பது என்றால் இதில் எத்தனைப் பித்தலாட்டமும், அறியாமையும் இருக்கின்றன என்று பாருங்கள். அதுபோல்தான் சரீரம் செய்யும் வேலைக்கு ஆத்மாவைப்பிணையாக்குவதும், ஆத்மாவுக்குத் தண்டனை ஏற்படுவதுமான காரியங்களாகும் என்பேன்.

மனிதனுக்கு ஆத்மா எதற்கு வேண்டி இருக்கிறது? ஜீவன்களின் கடமை என்ன? அல்லது ஜீவன்களால் மாத்திரம் என்று அல்லாமல் தோன்றி மறையும் புல் பூண்டு கிருமிமுதல் யானை திமிங்கலம் ஈராக உள்ள ஜீவப் பிராணிகளிடம் நாம் காணும் செயல்கள் என்ன? என்றெல்லாம் பார்ப்போமானால் ஜீவன்கள் பிறத்தல், வாழ்தல், இனத்தைப் பெருக்குதல், அழிதல் அல்லது மறைதல் என்பதல்லாமல் வேறு எதைக் காணுகிறோம். இந்தத் தன்மையில் ஜீவன்கள் அதனதன் உடலமைப்புக்கு ஏற்றபடி நடத்தைகள் நடந்துகொள்ளுதல்காணப்படுகின்றன.

உண்மையில் இந்த நடத்தைகளுக்கும், ஜீவன்களுக்கும் பொறுப்பு எதுவுமே இருக்க இடமில்லை என்னலாம்.

நடத்தைகளைப்பற்றி நாம் நல்லது கெட்டது என்று குணங்கள் கற்பிக்கின்றோம். இந்தக் குணங்களின் பலனை அனுபவிக்கத்தான் என்று ஆத்மா கற்பிக்கப்பட்டிருக்கிறது. நல்ல நடத்தை, நல்ல குணம், நல்ல காரியம் என்பவற்றிற்கு என்ன அளவுக் கருவியோ, பரீட்சைக் கருவியோ நமயிடம் இருக்கிறது? நல்ல காரியத்திற்கு நல்ல பலன், கெட்ட காரியத்திற்குக் கெட்ட பலன் என்பது இந்தப்படியாக எழுதினவன், சொன்னவன் ஆகியவனுடைய சொந்த அபிப்பிராயமே தவிர அதற்கு மூலம் என்ன? அத்தாட்சி என்ன? என்று யார் எதைக்கொண்டு சொல்லமுடியும்? காரியத்தின் தன்மைக்கு ஆதாரம் இல்லையானாலும் அவைகளின் பலனுக்கு நிச்சயமில்லையானா

திராவிடப்
# புரட்சிக் கொடி

வெள்ளி இராமலினால் மூன்று சைஸ்களில் பேட்ஜுகள், இயக்க சம்மந்தமான பட்டன் வகையறாக்கள், முஸ்லிம் & கம்யூனிஸ்டு கொடிகள். தேவைக்கு,

N. R. சாமி,
ஜெனரல் மெர்செண்ட்,
மெ. மெ. வீதி, காரைக்குடி.

# தென் நாடு

டாக்டர் ஈ. சுப்பிரமண்யம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு தாழ்த்தப்பட்டோர் நலன் கருதி வாரம் ஒருமுறை வெளிவரும் பத்திரிகை. அச்சமற்ற ஜாதி கண்டனங்கள்! ஆணித்தரமான அரசியல் கட்டுரைகள் நிறைந்தது.

'தென்நாடு' நிலையம் ஆம்பூர், N. A.

னும் ஆத்மாவுக்கு வேலையே இல்லை என்பேன்.

ஆகவே ஆத்மா என்பதை ஆகாயத்தில் தளவாடம் இல்லாமல் கட்டப்பட்ட ஒரு கோட்டை என்றுதான் சொல்ல வேண்டும். மனிதன் தன்னை சுட்டிக்காட்டுகிற தன்மை போலவே தன்னுடைய ஆத்மா அதாவது நான், என்னுடைய உயிர், என்னுடைய ஜீவன், என்னுடைய ஆத்மா என்றெல்லாம் சொல்லுகிறான் என்றாலும் இது அந்தப்படிச் சொல்லும் சக்தி சௌகரியம் இருப்பதால் சொல்லுகிறானே ஒழிய தன்னைக் கண்டோ, தன்னிடத்தில் இருப்பதை அறிந்தோ சொல்லுகிறான் என்றுசொல்ல முடியாது. அப்படி எவனும் சொல்லுவதுமில்லை. "நான்", "என்னுடையது", என்று சொல்லுவதுபோலவே மனிதன் "என்னுடைய நான்" என்றும், "என் ஆத்மாவுடைய நான்" என்றும், "என் ஆத்மாவுடைய ஆத்மா" என்றும் அநேகமாற்றுப் பல வார்த்தைகள் சொல்லவும் எண்ணவும் செய்யலாம். அப்படியானால் இவையெல்லாம் சரியென்று அருத்தமா? ஆதலால் சொல்ல வசதி இருப்பதெல்லாம் உண்மை என்றும், சரி என்றும் ஒப்புக்கொள்ள முடியாது.

முதலாவது ஜீவன் அல்லது உயிர் என்பது என்ன? என்று பாருங்கள். அதுவும் ஒரு நினைப்பே தவிர ஜீவன் என்றோ, உயிர் என்றோ, ஒன்று இருக்கிறது என்று சொல்லமுடியுமா?

ஜீவனைத்தான் ஆத்மா என்றும், ஜீவன்தான் உயிர் என்றும் கூடச் சொல்லப்படுகின்றது.

உயிர் என்றால் காற்று என்றும் சொல்லப்படுகிறது. என்னைப்பொறுத்தவரை உயிர் என்றால் தானாக இயங்கும், தானாக அசையும் தன்மை என்று கருதுகிறேன். அதாவது,

(தொடரும்)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகள், பங்களாக்கள், தோட்டம் முதலியவைகளும் பொதுவுடைமையாக்கப்பட்டு, அவரவர் வசிப்பதற்குப் போதுமான அறைகள் (apartments) வகுத்துக் கொடுக்கும் பட்சத்திலும், வீடு போதாமைக்கு இன்னும் பலகோடி வீடுகளைப் பொதுவாகக் கட்டுவித்தும், மற்றெல்லாவற்றையும் பொதுவாகப் பாவிக்கப்படும் பட்சத்திலும் என்ன கஷ்டம் நேரிடுமென்று கேட்கின்றோம்! ஐந்து இலட்சம் போர்வீரர்களுக்கும், இலட்சம் சேவகர்களுக்கும் தங்கி வாழ பொது வீடுகள் அமைக்கப்பட்டு இருக்கின்றபோது, வீடில்லாமல் தவிக்கும் 30 கோடி மக்களுக்குத்தங்கிவாழ ஏன் பொதுவாக வீடு அமைக்கக்கூடாது. இதே மாதிரியாகவே இரயில்களும், கப்பல்களும், தொழிற்சாலைகளும், பாங்குகளும் பொதுச் சொத்தாகப் பாவிக்கப்படும் பட்சத்தில், இவைகளில் கிடைக்கும் ஏராளமான திரவியம் சிறுபான்மையோராகிய முதலாளிகளுக்கும், அவர்களுடைய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் இலட்சலட்சமாகப் போகாமல், பெரும்பான்மையான பொதுமக்களுக்கு உதவுமன்றோ! இத்தியாதி பெரும்சொத்துகள் பொதுவுடைமை ஆக்கப்படின், தனிச் சொத்தாக அவைகள் இருக்கும்பொழுது அவைகளின்பேரில் ஏற்பட்டுள்ள கோடாகோடி கடன்களும் பொதுவாகத் தள்ளிவிடப்படுமன்றோ! எனவே பசிப்பிணியாலும், வேலையில்லாமையாலும், வாடிவதங்கும் கோடாகோடி மக்கள் கவலையற்றுச் சுகம் பெறவேண்டுமாயின், தனிச் சொத்துகளாகப் பாவிக்கப்படும் நிலம், நீர், தொழிற்சாலைகள், பாங்குகள், இரயில்கள், கப்பல்கள், டிராம் வேக்கள், மின்சார வசதிகள், பெரிய வீடுகள், கோவில் சொத்துகள், மதஸ்தாபனங்கள் ஆகிய யாவும் பொதுவுடைமையாக ஆக்கப்படவேண்டும் இக்கால இராஜ்யங்கள் மனிதனை ஆண்டு வருகின்றன. ஆனால் பொதுவுடைமை இராஜ்யத்தில், அதாவது சமதர்ம இராஜ்யத்தில், விளைபொருள்களும், செய்பொருள்களும் ஆளப்படுமென அறிக. அன்றுதான் மக்களைப் பிடித்தாட்டும் துக்கம் நிவர்த்தியாகுமென அறிக. ஆதலின் சமதர்மிகள் செய்பொருள், விளைபொருள் ஆகியவற்றை ஆளும் ஆட்சியைக் கைப்பற்றுவார்களாக!


# பூந்தோட்டம்

(மாத வெளியீடு)

பதிப்பாசிரியர்:

வை. திருநாவுக்கரசு.

முதல் வெளியீடு

தலைவர் பெரியார்,

A. V. P. ஆசைத்தம்பி

மற்றும் அறிஞர் பலரின்

கருத்துரைகளுடன்

ஜனவரி முதல் வாரத்தில்

பெரியாரின் அழகிய முகப்புப்

படத்துடன்

வெளிவருகிறது.

தனிப்பிரதி 4 அணா

எங்கும் ஏஜண்டுகள் உடனே தேவை

"பூந்தோட்டம்",

அரிசிப்பாளையம், சேலம்.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.